## கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு – 2016

கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பின் தலைவருக்கு 2017 செப்தெம்பர் 10 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப்பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப்பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நம்பிக்கைப் பொறுப்பில் காணப்படும் ரூபா 20,000,000 தொகைக்காக வருடாந்தம் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் நம்பிக்கைப் பொறுப்பிற்கு பெற்றுக்கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 60,000 பெறுமதியான பாவனைக்கு எடுக்கப்படாத நினைவிழக்கச் செய்யும் மருந்து இருப்பு, இருப்பின் கீழ் கணக்கீடசெய்வதற்குப் பதிலாக செலவினம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பனவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டம் | |
| 8(1) ஆம் மற்றும் 9 பிரிவு | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே, கண்டி சுற்றுப்புற தேவாலயங்களின் சுற்றுபுற பஸ்நாயக்க நிலமேக்கள், கண்டி மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் மற்றும் சனாதிபதியால் பெயரிடப்படுகின்ற மூன்று உறுப்பினர்களுடன் கூடிய மதியுரைக் குழுவொன்று நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் நிர்வாகம் தொடர்பாக குழுவின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | நிதிப் பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 5/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி | நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட பாதீடு முன்னைய ஆண்டின் செப்தம்பர் 30 ஆந் திகதி முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் மற்றும் அரச நிதிப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் செலவினத்தை மேற்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்படாதிருக்கையில் இரண்டு செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 135,652 செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) ஸ்ரீ தலதா மாளிகையின் பெரஹரவிற்காக மானியமாக ரூபா 1,000,000 தொகை 2016 பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,500,000 செலுத்தப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 500,000 தொகை மதிப்பீட்டு நிதிஏற்பாடு இல்லாமல் செலவிடப்பட்டிருந்தது.

## 3 நிதி மீளாய்வு

### 3.1. நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 1,916,848 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 116,613 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,033,461 தொகையான அதிகரிப்பொன்று தென்பட்டது. ஆசனங்களை விதிக்கும் வருமானம் ரூா 3,599,600 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

* வருடாந்த எசல பெரஹராவை நடாத்தும் பொருட்டு ஸ்ரீ தலதா மாளிகைக்கும் சுற்றுப்புற தேவாலயங்களுக்கும் நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.

* பெரஹராவின் கலைநுட்பமான மற்றும் கலாசார பெறுமதியை மேம்படுத்தும் தேசிய கலை மற்றும் நடனங்களை ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும்.

* எவரேனும் கலைஞர்களினதும் சிற்பிகளினதும் சேவையால் பெரஹராவின் கலாச்சார மற்றும் கலை சார்ந்த பெறுமதியை மேம்படுத்த முடியுமாக இருக்கும் போது அக் கலைஞர்களுக்கும் சிற்பிகளுக்கும் நிதி உதவி வழங்கல்.

* பெரஹராவின் போது பயன்படுத்தக்கூடிய பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடல்.

* பெரஹராவிற்கு சமூகமளிக்கும் கலைஞர்களுக்கும் நடனக்காரர்களுக்கும் போட்டிகளை நடாத்துதல் மற்றும் அவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் ஏனைய வகையில் விருதுகளை வழங்கல்.

மேற்குறித்த நோக்கங்களில் கீழே காட்டப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) வருடாந்த கண்டி எசல பெரஹராவின் கலைநுட்பமான மற்றும் கலாசார பெறுமதியை மேம்படுத்தும் தேசிய கலை மற்றும் நடனங்களை மேம்படுத்துதல்.

(ஆ) வருடாந்த கண்டி எசல பெரஹராவின் போது பயன்படுத்தக்கூடிய பொருட்கள் உற்பத்தி செய்தல்

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) நம்பிக்கைப் பொறுப்பின் பொறுப்பாளரொருவராக பொது நம்பிக்கையாளரால் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் பிரகாரம் ரூபா 20,000,000 தொகை பிரமுக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அவ்வங்கி வங்கரோத்து அடைந்தமையால் கிடைத்த வைப்புத் தொகை பொது நம்பிக்கையாளரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்த போதிலும், வைப்புச் செய்யப்பட்ட பெறுமதிக்குரிய சான்றிதழொன்று பெரஹர நம்பிக்கைப் பொறுப்பிற்கு கணக்காய்வு திகதியான 2017 ஏப்ரல் 28 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கண்டிப் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்ட 2008 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய இலங்கையின் நம்பிக்கைப் பொறுப்பாளரின் PT/5/3/R/30/5(1) ஆம் இலக்க கடிதத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய சேமிப்பு வங்கியில் அவ்வாண்டில் காணப்படும் வட்டி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு அப்பணத்திற்காக வட்டியை பெரஹர நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக வட்டியொன்று நம்பிக்கைப் பொறுப்பிற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பிற்குச் சொந்தமாக ரூபா 1.1 மில்லியன் மிகையான பணத்தை கூடுதலான வட்டியுடன் நிலையான வைப்புக் கணக்கொன்றில் முதலீடு செய்ய முடியுமாக இருக்கையில் 2012 நவம்பர் மாதம் முதல் சாதாரண சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 03 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்**

நிறுவகத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்றும் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) பேரேட்டுக் கணக்குகள் முறையாக பராமரிக்காமை. |
| | (iii) சொத்துக்கள் மீதிகள் கணக்குகளிலிருந்து விடுபடல். |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான பெறுமதிகளுக்கிடையே விலகல் காணப்படல் |